RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 242 | செப்டம்பர் 06, 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# "மாணவர்கள் அதிக நேரம் மொபைல் பார்ப்பதை தவிர்க்க உதவுவீர்" - ஆசிரியர்களிடம் பிரதமர் மோடி வலியுறுத்தல்

புதுடெல்லி: செப்.6-

"மாணவர்கள் அதிக நேரம் மின்னணு திரைகளைப் பார்ப்பது குறித்த கவலை அதிகரித்து வருகிறது. இதற்கு தீர்வு காணும் நோக்கில், அவர்கள் விளையாட்டு மற்றும் ஆக்கப்பூர்வ செயல்பாடுகளில் ஈடுபடுவதை ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும்" என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வாகியுள்ள 82 ஆசிரியர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி நேற்று கலந்துரையாடினார். அது குறித்த வீடியோ காட்சிகளை, ஆசிரியர் தினத்தையொட்டி அவர் தனது சமூக ஊடக பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அதில் பிரதமர் நரேந்திர மோடி, "மாணவர்களின் வாழ்க்கையை வடிவமைக்கும் அதேநேரத்தில், பாடப் புத்தகங்களுக்கு அப்பால் சென்று குழந்தைகளின் இயல்பான குழந்தைத் தன்மையைப் பாதுகாப்பதிலும் ஆசிரியர்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும். ஒவ்வொரு மாணவருக்குள்ளும் இருக்கும் குழந்தையை உயிர்ப்புடன் வைத்திருக்க ஆசிரியர்கள் உறுதிபூண வேண்டும். அதற்கு அவர்கள் தங்களுக்குள் இருக்கும் குழந்தையை தக்கவைத்துக்கொள்ள வேண்டும்.

பாடத்திட்டத்துக்குள் தங்களை மட்டுப்படுத்திக்கொள்ளாமல், குழந்தைகளின் வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆசிரியர்கள் மாறினால்தான் குழந்தைகளிடம் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.



குழந்தைகள் அதிக நேரம் மின்னணு திரைகளில் மூழ்குவது முக்கிய கவலையாக மாறியுள்ளது. மாணவர்கள் திரைப் பயன்பாட்டுக்கு அடிமையாவதைக் குறைக்க அவர்களை விளையாட்டு, வெளிப்புற செயல்பாடுகள், ஆக்கப்பூர்வமான முயற்சிகள் ஆகியவற்றில் ஈடுபட ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு தற்போது அதிகரித்து வருகிறது. பெண்கள் தாமாகவே முன்வந்து மருத்துவ பரிசோதனைகளை செய்து கொள்வது அதிகரித்து வருகிறது.

போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்து வரும் ஒரு அச்சுறுத்தலாக உள்ளது. குழந்தைகள் அறியாமலேயே இதற்கு பலியாகக் கூடும் என்பதால், ஆசிரியர்கள் தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

குழந்தைகளை வகுப்பறைக்கு அப்பால் அழைத்துச் சென்று, நிஜ உலகத் திறன்களுடன் அவர்களை இணைப்பதற்கு தேசிய கல்விக் கொள்கை அதிக முன்னுரிமை அளித்துள்ளது. சமூகத்துக்கு ஆசிரியர்கள் அளிக்கும் மகத்தான பங்களிப்பை பாராட்டுவதே ஆசிரியர் தினத்தின் நோக்கம். அத்துடன் பாரத ரத்னா டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணனுக்கு மரியாதை செலுத்தும் நாளாகவும் இது அமைகிறது" என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு மூன்று துறைகளைச் சேர்ந்த 82 ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் தேசிய ஆசிரியர் விருதுகளுக்குத் தேர்வாகி உள்ளனர். இவர்களில் பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையைச் சேர்ந்த 48 ஆசிரியர்கள், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த 21 ஆசிரியர்கள், திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தைச் சேர்ந்த 13 திறன் பயிற்சியாளர்கள் ஆகியோர் அடங்குவர். இந்த கலந்துரையாடலின்போது, விருது பெற்ற ஆசிரியர்கள் தங்கள் அனுபவங்களை பிரதமருடன் பகிர்ந்து கொண்டனர்.

## நீரிழிவு நோயாளிகள் புகைப்பிடித்தால் உயிரிழப்பு அபாயம் 55% அதிகரிப்பு

### சர்வதேச நிபுணர்கள் எச்சரிக்கை 'தீவிர சிகிச்சை தேவை'

புதுடெல்லி, செப்.06-

நீரிழிவு நோயாளிகள் புகைப்பிடித்தால் அவர்களின் உயிரிழப்பு அபாயம் 55 சதவீதம் அதிகரிப்பதாகவும், இதற்கு தீவிர சிகிச்சை தேவை என்றும் சர்வதேச மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

'நீரிழிவு நோய் ஆய்வு மற்றும் மருத்துவ நடைமுறை' என்ற இதழில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வு கட்டுரையில் கூறப்பட்டுள்ளதாவது: புகைப்பிடிப்பதால் நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்பாடும் பாதிப்புகள் குறித்து சர்வதேச அளவில் ஆய்வு நடத்தப்பட்டது. 11.3 லட்சம் பேரை உள்ளடக்கிய 48 ஆய்வுகளின் பகுப்பாய்வு, புகைப்பிடிப்பவர்களுக்கு மரண அபாயம் 55 சதவீதம் அதிகம் இருப்பதைக் கண்டறிந்தது.

மேலும், சுமார் 1.3 லட்சம் நீரிழிவு நோயாளிகளை ஆய்வு செய்த மற்றொரு ஆய்வில், புகைப்பிடிப்பவர்களுக்கு ஒட்டுமொத்த மரண விகிதம் 48 சதவீதமும், இதய நோயால் ஏற்படும் மரண விகிதம் 36 சதவீதமும் அதிகமாக இருப்பது தெரியவந்தது. இதன் அடிப்படையில் இந்திய நீரிழிவு நிபுணர் டாக்டர் அனூப் மிஸ்ரா உள்ளிட்ட 13 நாடுகளைச் சேர்ந்த 35 நிபுணர்கள் எச்சரிக்கையுடன் கூடிய பல்வேறு பரிந்துரைகளை வழங்கியுள்ளனர்.

இதன்படி புகைப்பிடித்தல், நீரிழிவு நோயாளிகளிடம் சிறுநீரக பாதிப்பு அபாயத்தையும் அதிகரிக்கிறது. குறிப்பாக, ஆல்புமினூரியா மற்றும் நீரிழிவு காரணமான சிறுநீரக நோய் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கிறது. ஜப்பானில் 2,490 டைப்-2 நீரிழிவு நோயாளிகளிடம் நடத்தப்பட்ட ஆய்வில், தினசரி புகைக்கும் சிகரெட்டுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது இன்சுலின் எதிர்ப்பு திறனும் அதிகரிப்பதையும், புகைப்பிடிப்பதை நிறுத்திய பிறகு அது குறைவதையும் கண்டறியப்பட்டது.

நீரிழிவு சிகிச்சையில் தற்போது புகைப்பிடிப்பதை நிறுத்துவது குறித்த ஆலோசனை பெரும்பாலும் குறுகிய அறிவுரைகளாகவே உள்ளன. எனவே, வழக்கமான புகைப்பிடிப்பதை மதிப்பீடு, செயலில் சிகிச்சை, உடல்நலக் கண்காணிப்பு மற்றும் மீண்டும் புகைப்பிடிப்பதை தடுக்கும் நடவடிக்கைகள் ஆகியவை நீரிழிவு பராமரிப்பின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## செப்.1-ல் கொள்முதல் தொடங்க வேண்டிய நிலையில்...

# அரசாணை வராததால் நெல் கொள்முதல் பணிகள் முடக்கம் - டெல்டா விவசாயிகள் கவலை

தஞ்சாவூர், செப்.06-

நடப்பு பருவத்தில் நெல் கொள்முதல் செய்வதற்கான அரசாணையை தமிழக அரசு இன்னும் வெளியிடாததால், செப்.1-ம் தேதி தொடங்க வேண்டிய கொள்முதல் பணிகள் இதுவரை தொடங்கப்படாமல் உள்ளன. இதனால், கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைகள் தேங்கியுள்ளன.



தமிழகத்தில் விளைவிக்கப்படும் நெல்லை, இந்திய உணவு கழகத்துக்கு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முகவராக இருந்து விவசாயிகளிடம் கொள்முதல் செய்து தருகிறது. கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள், நாடு முழுவதும் பொது விநியோக திட்டத்துக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

இதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்துக்கு இந்திய உணவு கழகம் வாயிலாக மத்திய அரசு நிதி உதவியை வழங்கி வருகிறது. இந்திய உணவு கழகம் ஒவ்வொரு ஆண்டும் நெல் கொள்முதல் செய்ய கொள்முதல் பருவ காலத்தை அக்.1-ம் தேதி முதல் செப்.30-ம் தேதி வரை நிர்ணயித்து இருந்தது.

இந்தப் பருவத்தில் தமிழக விவசாயிகள் விளைவிக்கும் குறுவை, சம்பா, தாளடி, கோடை நெல் ஆகியவற்றை கொள்முதல் செய்ய நுகர்பொருள் வாணிப கழகம், கிராம அளவில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறந்து விவசாயிகளிடம் கொள்முதல் செய்து வருகிறது.

ஆண்டுதோறும் மத்திய, மாநில அரசுகள் வழங்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை, ஊக்கத் தொகை ஆகியவற்றை இந்த கொள்முதல் பருவ காலத்தில் வழங்கி அமல்படுத்துவது வழக்கம்.

ஆனால், 2022-ம் ஆண்டு குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணை வழக்கமான ஜூன் 12-ம் தேதிக்கு முன்னதாகவே, அதாவது மே 24-ம் தேதி திறக்கப்பட்டது. இதனால், குறுவை சாகுபடியும் முன்கூட்டியே தொடங்கி, அறுவடைக்கு வந்ததால், தமிழக அரசுகொள்முதல் பருவத்தை அக். 1-க்குபதிலாக மத்திய அரசு அனுமதியுடன் செப்.1-ம் தேதியே கொள்முதல் செய்யத் தொடங்கியது.

அதன்பின், ஒவ்வொரு ஆண்டும், செப்.1-ம் தேதி முதல் குறுவை கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், தற்போது செப்.4-ம் தேதி ஆகியும் இதுவரை அரசாணை வரவில்லை எனக் கூறி, கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் பணிகள் தொடங்கப்படவில்லை.

அதே நேரத்தில், ஒரு சில இடங்களில் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கொள்முதல் செய்தாலும், அதற்கான ரசீது மற்றும் பணம் பட்டுவாடா வழங்காமல் உள்ளனர்.

இதுகுறித்து காவிரி விவசாயிகள் சங்க பாதுகாப்பு செயலாளர் சுந்தர விமல்நாதன் கூறியது: செப்.1-ம் தேதி கொள்முதல் பணிகள் தொடங்க வேண்டிய நிலையில், 4-ம் தேதி ஆகியும் இதுவரை பணிகளை தொடங்கவில்லை.

எனவே, தமிழக அரசு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், கடந்தாண்டு பொது ரகத்துக்கு குவிண்டாலுக்கு ரூ.2,500 விலை வழங்கப்பட்ட நிலையில், இந்தாண்டு ரூ.2,600-ம், சன்ன ரகத்துக்கு கடந்தாண்டு ரூ.2,545 வழங்கப்பட்ட நிலையில் இந்தாண்டு ரூ.2,750-ம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அதன்படி, புதிய விலையை உடனடியாக அமல்படுத்த அரசாணை வெளியிட வேண்டும்.

இல்லை யென்றால் கொள்முதல் பருவ காலத்தை தெளிவுபடுத்த வேண்டும் என்றார். இதுகுறித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரிகள் கூறியது: நெல் கொள்முதல் செய்ய நிகழாண்டுக்கான அரசாணை இதுவரை வரவில்லை.

வந்தவுடன் புதிய விலையில் கொள்முதல் செய்யப்படும். ஒரு சில இடங்களில் நெல் வரத்து அதிகமாக உள்ள பகுதிகளில், தற்போது கொள்முதல் நடைபெற்று வருகிறது. புதிய விலை தொடர்பான அறிவிப்பு வந்தவுடன் அவர்களுக்கு அதற்கான விலை வழங்கப்படும் என்றனர்.

# மின்துறை அறிவிப்புகளை திரும்பப் பெற வேண்டும்

## மின்ஊழியர் மத்திய அமைப்பு வலியுறுத்தல்

சென்னை, செப்.06-

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் ஜெயசங்கர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: சட்டப்பேரவையில் மானிய கோரிக்கையின் போது தூத்துக்குடியில் சூப்பர் கிரிட் தெர்மல் நிலையம் அரசு, தனியார் பங்களிப்புடன் தொடங்கப்படும் என முதல்வர் அறிவித்துள்ளார்.




அதேபோல், எண்ணூர் அனல் மின் நிலையமும் தனியார், அரசு பங்களிப்பு மூலம் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கேரளா போல கேப்க்ஸ் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை செயல்படுத்தாமல், மின்விநியோக பணிகளையும், மின் கணக்கீட்டு பணிகளையும் - தரவுகளையும் தனியாரிடம் ஒப்படைக்கும் வகையில் டோடெக்ஸ் ஸ்மார்ட் மீட்டர் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மின்சார வாரியத்தில் ஐந்தாண்டு ஒப்பந்த முறையில் 10 ஆயிரம் பேர் பணி அமர்த்தப்படுவர் என கூறப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புகள் மின்சார வாரியம் தனியார்மையத்தை நோக்கி செல்வதை உணர்த்துகிறது.

இந்த அறிவிப்புகளை திரும்பப் பெற வேண்டும். மின் துறையை தனியார் பாதைக்கு கொண்டு செல்லும் முடிவு கண்டிக்கத்தக்கது. எனவே, அரசின் இந்த அறிவிப்புகளை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் இல்லையெனில், மிகப்பெரிய அளவில் போராட்டத்தை நடத்துவோம். இவ்வாறு ஜெயசங்கர் கூறியுள்ளார்

# இன்டர்போல் போலீசால் தேடப்படும் குற்றவாளி நித்யானந்தா புதுச்சேரி வருகை?

புதுச்சேரி, செப்.-

இன்டர்போல் போலீசால் தேடப்படும் குற்றவாளி நித்யானந்தா புதுச்சேரி வருவதாக கூறப்படுகிறது. அவருக்கு பாதுகாப்பு கேட்டு சீடர்கள் முதல்வர் ரங்கசாமியிடம் கோரிக்கை விடுத்தனர். புதுச்சேரி அடுத்த ஏம்பலம் கிராமத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கைலாசா நித்யானந்தா தியான பீடத்துக்கு, குடமுழுக்கு செய்வதற்கான நடவடிக்கைகளை நிர்வாகிகள் மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக புதுச்சேரி சட்டசபைக்கு வந்த நித்யானந்தரின் சீடர்கள்,



முதல்வர் ரங்கசாமியை நேற்று சந்தித்தனர். அப்போது, ஏம்பலத்தில் அமைந்திருக்கும் தியான பீடத்துக்கு விரைவில் குடமுழுக்கு செய்ய முடிவெடுத்து இருப்பதாகவும், இதில் பங்கேற்க நித்யானந்தா புதுச்சேரிக்கு வருகை தர உள்ளதாகவும் கைலாசா நிர்வாகிகள் தெரிவித்தனர்.

மேலும், சுவாமி நித்தியானந்தா புதுச்சேரி வருவது தொடர்பாக மத்திய அரசிடமும் பேசி வருகிறோம். அதனால் அவர் புதுச்சேரிக்கு வரும்போது மாநில அரசு சார்பில் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து தர வேண்டுமெனவும் கோரிக்கை வைத்தனர். அதற்கு, 'சரி, அவர் வரட்டும்.. பார்த்துக் கொள்ளலாம்., என்று சொன்ன முதல்வர் ரங்கசாமிக்கு, கைலாசா சிறப்புகள் அடங்கிய புத்தகத்தை தியான பீட நிர்வாகிகள் வழங்கினார்.

பாலியல், ஆள்கடத்தல், சிறார்களை தவறாக வழிநடத்துதல் உள்ளிட்ட வழக்குகளில் சிக்கி தலைமறைவான நித்யானந்தா, கடந்த 2020ல் கைலாசா என்ற பெயரில் தனி நாட்டை உருவாக்கியதாக அறிவித்தார். அதிலிருந்து தொடர்ச்சியாக வீடியோக்களில் மட்டும் நித்யானந்தா பேசி வருகிறார். நித்யானந்தாவுக்கு இன்டர்போல் கடந்த 2020ம் ஆண்டு ப்ளூ கார்னர் நோட்டீஸ் வழங்கி தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார். இதுபோன்ற சூழலில் நித்யானந்தா புதுச்சேரிக்கு வருவதாக அவரின் சீடர்கள் தெரிவித்திருப்பது பொதுமக்களிடம் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

# தேயிலை வாரியத்தின் உதவித்தொகை மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் குன்னூர் மண்டல அலுவலகம்

நீலகிரி, செப்.07-

இந்தியத் தேயிலை வாரியத்தின் குன்னூர் மண்டல அலுவலகம், தேயிலை மேம்பாட்டு மற்றும் புரோமோஷன் திட்டத்தின் (TDPS) கீழ் சிறு தேயிலை விவசாயிகள், சுயஉதவிக் குழுக்கள் (SHG) மற்றும் விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்புகளுக்காக (FPO) பல்வேறு நலத்திட்டங்களையும், பயிற்சிகளையும் செயல்படுத்தி வருகிறது. சிறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பசுந்தேயிலைக்கு உரிய விலையும், சந்தையில் தயாரிப்புத் தேயிலைக்கு கூடுதல் விலையும் கிடைப்பதை உறுதி செய்ய வாரியம் தொடர்ந்து தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆகஸ்ட் 2026 மாதத்தில், 2 விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்புகளும், சிறு தேயிலை விவசாயிகள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் 261 வாரிசுகளும் கல்வி உதவித்தொகையைப் பெற்றுள்ளனர். மேலும், பட்டியல் சாதியினர் துணைத் திட்டத்தின் (SCSP) மூலம் 16 சிறு தேயிலை விவசாயிகள் நிதியுதவி பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

தென்னிந்திய தேயிலைத் துறையில் 1953-ஆம் ஆண்டின் தேயிலைச் சட்டம் மற்றும் கட்டுப்பாட்டு உத்தரவுகளின் கீழ் தரக்கட்டுப்பாடு, முறையான விநியோகம் மற்றும் நியாயமான விலை நிர்ணயத்தை உறுதிசெய்ய ஆகஸ்ட் மாதத்தில் தீவிர ஆய்வுகள் நடத்தப்பட்டன. தேயிலை உற்பத்தி நிலையங்கள், சேமிப்புக் கிடங்குகள், வாங்குபவர் வளாகங்கள், ஏற்றுமதி அலகுகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் உட்பட 86 இடங்களில் அதிகாரிகள் ஆய்வு நடத்தி, உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் விதிகள் (FSSR), 2011-ன் படி 513 தேயிலை மாதிரிகளைச் சேகரித்து ஆய்வகப் பரிசோதனைக்கு அனுப்பியுள்ளனர். தென்னக மண்டலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் தரம் மற்றும் சுகாதார விதிகளுக்கு ஏற்ப 16 புதிய உரிமங்கள் மற்றும் பதிவுகள் வழங்கப்பட்டுள்ளன. அதேவேளையில், தரக்கட்டுப்பாட்டை மீறிய இன்ஸ்டன்ட் தேயிலை உற்பத்தி நிறுவனம் ஒன்றின் பதிவுச் சான்றிதழ் மற்றும் தேயிலைக் கழிவு உரிமத்தை குன்னூர் மண்டல அலுவலகத்தின் செயல் இயக்குநர் நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார்.




# 100% தேர்ச்சி பெற்ற பள்ளி முதல்வர் தாளாளர்களுக்கு கௌரவ விழா

திருப்பத்தூர், செப்.07-

திருப்பத்தூர் மாவட்டம் தனியார் பள்ளிகள் கூட்டமைப்பின் சார்பில் 100% சதவீத தேர்ச்சி பெற்ற பள்ளி முதல்வர் மற்றும் தாளாளர்களுக்கு பொன்னாடை மற்றும் நினைவு பரிசு வழங்கும் விழா தலைவர் அசோகன், செயலாளர் சரவணகுமார், பொருளாளர் பாலாஜி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் திருப்பதி மற்றும் பஷீர் அகமத் ஆகியோர் கலந்து கொண்டு 100% சதவீத தேர்ச்சி பெற்ற பள்ளி முதல்வர் மற்றும் தாளாளர்களுக்கு பொன்னாடை மற்றும் நினைவு பரிசு வழங்கி கௌரவித்தார்கள். இவ்விழாவில் பிரைட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் மற்றும் தாளாளர் Lion A.பழனி பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கப்பட்டது. மேலும் அறக்கட்டளையின் தலைவர் K.சந்திரமோகன் செயலாளர் Rtn PHF G.சக்கரவர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் ஸ்ரீ இராமகிருஷ்ணா மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளியின் ஆசிரியர் தின விழா பள்ளியின் அறக்கட்டளை தலைவர், தாம்பரம் மாநகர செயலாளர், எஸ்.ஆர்.ராஜா அவர்கள் தலைமையில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மு.தலைவர் திண்டுக்கல்.ஐ.லியோனி அவர்கள் பங்கேற்று சிறந்த ஆசிரியர்கள் மற்றும் சிறந்த பெற்றோர்களுக்கு விருதுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் பள்ளியின் செயலாளர் டி.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பள்ளியின் முதல்வர் எஸ்.ஜெகதாம்பாள் ஆகியோருடன் ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்








# சூப்பர் ஸ்டார் அகாடமி பட்டமளிப்பு விழா

மாதவரம், செப்.07-

சென்னை சேத்பட்டு சிந்தி மாடல் மெட்ரிக்குலேஷன் மேல்நி லைப்பள்ளி வளாகத்தில் சூப்பர் ஸ்டார் அகாடமி மற்றும் திவ்யா எஜுகேஷனல் அண்ட் சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் பட்டமளிப்பு விழா சூப்பர் ஸ்டார் அகாடமியின் நிறுவனரும் முதல்வருமான டாக்டர் பி.உமாமகேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.மாணவி லட்சுமி அனைவரையும் வரவேற்றார், முதல்வர் டாக்டர் பி.உமாமகேஸ்வரி ஆண்டறிக்கையை வாசித்தார். சூப்பர் ஸ்டார் அகாடமி தாளாளர் ஆர். நாகலிங்கம், துணை முதல்வர் பி.ஜெயலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக சேத்பட்டு சிந்தி மாடல் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி முதல்வர் லட்சுமி சாய்குமார், கோல பெருமாள் செட்டி வைஷ்ணவா சீனியர் செகண்டரி பள்ளி இயக்குநர் மீனா மேத்தா ஆகியோர் கலந்துகொண்டு அகாடமியில் பயிற்சி பெற்ற 100-க்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு பட்டம் மற்றும் நினைவு பரிசுகளை வழங்கி பாராட்டி வாழ்த்தினர். இதில் சூப்பர் ஸ்டார் அகாடமியின் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், மாணவிகள் உட்பட பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். முடிவில் மாணவி லதா அனைவருக்கும் நன்றி கூறினார்.



# நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் கிராமம் ஸ்ரீ கண்ணன் ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி விழா

மாதவரம், செப்.6-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் ஸ்ரீ கண்ணன் ஆலயத்தில் 29-ம் ஆண்டு கிருஷ்ண ஜெயந்தி விழா ஆலய நிர்வாகிகள் தலைவர் தமிழரசன்,செயலாளர் ரமேஷ், பொருளாளர் ரமேஷ், துணைத்தலைவர் சீனிவாசன், துணை செயலாளர் ஜெகநாதன், கணக்கு தணிக்கையாளர்கள் சீனிவாசன், மணிகண்டன், ஆலய காப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் முத்து, பாலாஜி, பாபு,சதீஷ்,கார்த்திக், முத்து, கண்ணியப்பன், தர்மன்,பூங்காவனம், கார்த்திக் மற்றும் ஸ்ரீ கலைக்கண்ணன் இளைஞர்கள் நற்பணி மன்றத்தினர்கள், கிராமநிர்வாகிகள், முன்னாள் கிராம நிர்வாகிகள், முன்னாள் நல்லூர் ஊராட்சி நிர்வாகிகள் உட்பட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் சுவாமிக்கு வெண்ணை மற்றும் இனிப்புடன் கூடிய படையல்பூஜையிட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீ கலைக்கண்ணன் நற்பணி மன்றம் சார்பில் உரியடித்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் ஸ்ரீ கண்ணன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது. மேலும் இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

# கல்லுகுறிக்கி காலபைரவர் கோயிலில் 816-ம் ஆண்டு பாலாபிஷேக விழா

## ஆயிரக்கணக்கான பெண்கள் பால்குட ஊர்வலம்

கிருஷ்ணகிரி, செப்.06-

கிருஷ்ணகிரி அடுத்த கல்லுகுறிக்கி காலபைரவர் கோயிலில் 816-ம் ஆண்டு பாலாபிஷேக விழாவில் ஆயிரக்கணக்கான பெண்கள் பால்குட ஊர்வலமாக சென்று சுவாமியை வழிப்பட்டனர்.

கிருஷ்ணகிரி அருகே கல்லுகுறிக்கி கிராமத்தில் பெரிய ஏரியின் மேற்கு கோடியில், 12-ம் ஆண்டு நூற்றாண்டில் சுயம்பு லிங்கமாக உருவெடுத்த காலபைரவர் சுவாமி, ஆவணி மாதம் 18-ம் நாள் உருவானது. இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆவணி மாதம் 18-ம் நாள் அன்று சுவாமிக்கு பாலாபிஷேகம் நடைபெற்று வருகிறது. அதன்படி இவ்வாண்டு 816-ம் ஆண்டு பாலாபிஷேக விழா நேற்று நடந்தது. காலை 5 மணியளவில் கணபதி ஹோமம், அஷ்டலக்ஷ்மி ஹோமம், நவகிரக ஹோமம், மஹாலட்சுமி ஹோமம் மற்றும் காலபைரவ மஹா ஹோமங்கள் நடந்தது. தொடர்ந்து மஹா பூர்ணாஹுதி செய்யப்பட்டு, மூலவர் காலபைரவருக்குச் சிறப்புப் பாலாபிஷேகமும் மகா தீபாராதனையும் நடத்தப்பட்டு பக்தர்களுக்குத் தீர்த்தப் பிரசாதம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து காலை 9 மணியளவில் கிருஷ்ணகிரி பழையபேட்டை பாரத கோயில் அருகிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பால்குடம் ஏந்தி ஊர்வலமாகப் புறப்பட்டனர். இந்த ஊர்வலம் ஆஞ்சநேயர் சுவாமி கோயில் வழியாக வலம் வந்து கல்லுகுறிக்கி காலபைரவர் கோயிலை அடைந்தது. தொடர்ந்து சுவாமிக்கு பாலாபிஷேகம் நடந்தது. பின்னர், 12 மணியளவில் காலபைரவர், சீத்த பைரவர், உற்சவ மூர்த்திகளுக்கு விசேஷ அலங்காரங்கள் செய்யப்பட்டு, மேளதாளங்கள் முழங்க உற்சவம் நடந்தது.

இவ்விழாவில், கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகிகள் மற்றும் கிராம மக்கள் செய்திருந்தனர். விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் காலை முதல் அன்னதானம் வழங்கப்பட்டது.

# மண்ணிவாக்கத்தில் 4ஆம் ஆண்டு அருள்மிகு ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம்

## பொது மக்கள் கலந்து கொண்டு சாமிதரிசனம் செய்தனர்

மண்ணிவாக்கம், செப்.07-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டா ங்குளத்தூர் ஒன்றிய த்துக்கு உட்பட்ட மண்ணிவாக்கம் ஊராட்சி யில் கருமாரியம்மன் தெருவில் அமைந்துள்ள 4ஆம் ஆண்டு அருள்மிகு ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் சனிக்கிழமை காலையில் கும்பாபிஷேக விழா தொடங்கியது காலை பூஜைகளுடன் துவங்கி அம்மன் அபிஷேகம் நடைபெற்றது அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்காரமும் செய்யப்பட்டு யாகசாலையில் கோபுரத்தில் இருந்து எடுத்து செல்ல பட்ட புனித நீரை கோபுரத்தின் கலசத்திற்கு ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது. கூடியிருந்த பக்தர்கள் ஓம் சக்தி என கோஷத்தை எழுப்பி வழிபட்டனர் அதன் பிறகு கலசத்தில் ஊற்றப்பட்ட புனித நீரானது பொதுமக்களின் மீது தெளிக்கப்பட்டது



நூற்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் கும்பாபிஷேகம் சிறப்பு வழிபாடுகளில் கலந்துகொண்டனர். பின்னர் 200க்கும் மேற்பட்டோர்க்கு அன்னதானம் வழங்கி சிறப்பான முறையில் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது

இந்த நிகழ்ச்சிக்கான கோவில் காப்பாளர்கள் இ.தாமோதரன், ஏ.புருஷோத்தமன் ஆகியோர் சிறப்பான முறையில் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பொதுமக்கள் ஆலய நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பழனியில் நடைபெற்ற யோகாசன நிகழ்ச்சியில் அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு யோகாசனம் குறித்த தனி ஆசிரியர் அமைக்க வேண்டும்

## வாய்ஸ் ஆப் பழனி பவுண்டேஷன் கமலேஷ் வலியுறுத்தல்

பழனி, செப்.07-

பழனியில் பள்ளி குழந்தைகள் கலந்து கொண்ட யோகாசன போட்டி நடைபெற்றது. திண்டுக்கல் மாவட்ட யோகா ஸ்போர்ட்ஸ் சங்கம் மற்றும் தமிழ்நாடு யோகா ஸ்போர்ட்ஸ் சங்கம்

வாய்ஸ் ஆப் பழனி பவுண்டேஷன் ஆகியவை இணைந்து போட்டிகளை நடத்தினர்.

திண்டுக்கல், திருப்பூர், கோவை மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் இருந்து 500 க்கும் மேற்பட்ட குழந்தைகள் யோகா போட்டியில் பங்கேற்று தங்கள் திறமையை வெளிப்படுத்தினர்.



ஐந்து வயது முதல் 15 வரை வயது வரையிலான குழந்தைகள் இந்த போட்டியில் பங்கேற்றனர். சூரிய நமஸ்காரம், பத்மாசனம், சிரசாசனம், அஞ்சராசனம், யோகமுத்திரா, சோமாசனம் உள்ளிட்ட பல்வேறு ஆசனங்களை குழந்தைகள் செய்து காட்டினர்.

சிறு குழந்தைகள் தங்களது உடலை வில்லாக வளைத்து ஆசனங்களை செய்தது காண்போரை வெகுவாக கவர்ந்தது. போட்டியில் பங்கேற்ற குழந்தைகளுக்கு பாராட்டி பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. சிறுவயதிலிருந்தே யோகா பயிற்சியை குழந்தைகள் செய்வதால் உடல் ஆரோக்கியமும், மன ஆரோக்கியமும் பெற முடியும் என்பதை வலியுறுத்தும் வகையில் யோகா போட்டிகள் நடத்தப்பட்டதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். தொடர்ந்து பத்திரிகையாளர் சந்திப்பில் அரசு பள்ளிகளில் யோகாசனம் குறித்து தனி ஆசிரியை நியமிக்கப்பட வேண்டும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு யோகாசனம் குறித்த பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும் இதுபோன்று நடக்கும் நிகழ்வுகளில் அரசு பள்ளி மாணவ மாணவிகள் அதிகப்படியாக பங்கேற்பதற்கு தமிழக அரசு முனைப்புடன் செயல்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

# நல்லாசிரியர் விருது பெற்ற தலைமை ஆசிரியை மணிமேகலைக்கு பாராட்டு



கிருஷ்ணகிரி, செப்.6–
கிருஷ்ணகிரி மாவட்டம் நாட்டாமை கொட்டாய் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை மணிமேகலைக்கு, ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சென்னையில் நடைபெற்ற விழாவில் நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டது.

செப்டம்பர் 5-ம் தேதி ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நேற்று சென்னையில் நடைபெற்ற விழாவில், பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் ராஜ்மோகன் அவர்கள் தலைமை ஆசிரியை மணிமேகலைக்கு நல்லாசிரியர் விருதை வழங்கி பாராட்டினார்.

மணிமேகலை கடந்த 2002-ம் ஆண்டு நாமக்கல் ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் இளநிலை விரிவுரையாளராக தனது பணியைத் தொடங்கினார். பின்னர் வேலூர் மாவட்டம் ஜோலார்பேட்டை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியத்தில் ஆசிரியர் பயிற்றுநராக பணியாற்றினார். அப்போது அனைத்து வகை பள்ளிகளையும் பார்வையிட்டு, ஆசிரியர்களுக்கு பல்வேறு பயிற்சிகளை வழங்கியதன் மூலம் சிறந்த அனுபவத்தைப் பெற்றார்.

கடந்த 2006-ம் ஆண்டு முதல் மேகல சின்னம்பள்ளி காமராஜர் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணியாற்றினார். பேச்சு, கட்டுரை, கவிதை, நாடகம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் மாணவர்களை பங்கேற்கச் செய்து, மாவட்ட அளவில் வெற்றி பெறச் செய்துள்ளார். மேலும், வட்டார மற்றும் மாவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் நடுவராகவும் பணியாற்றியுள்ளார்.

2019-ம் ஆண்டு தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்ற பின்னர், நாட்டாமை கொட்டாய் அரசு உயர்நிலைப்பள்ளியில் 100 மரக்கன்றுகளை நட்டு, அவற்றை பராமரித்து வளர்த்துள்ளார். நெகிழிப் பயன்பாட்டைத் தவிர்த்து மீண்டும் மஞ்சப்பையை பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தி பல்வேறு இடங்களுக்கு சென்று பொதுமக்களிடையே விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளார்.

இதன் பயனாக, மாநில அளவில் நடைபெற்ற 'மீண்டும் மஞ்சப்பை விருது' போட்டியில் முதல் பரிசுடன் ரூ.10 லட்சம் பரிசுத் தொகையை பள்ளிக்கு பெற்றுத் தந்துள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளாக மன்றப் போட்டிகள், கலைத் திருவிழா, அறிவியல் கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் மாணவர்களை பங்கேற்கச் செய்து, மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளார். மேலும், 10-ம் வகுப்பு மாணவர்களின் தேர்ச்சி சதவீதத்தையும், மதிப்பெண் சராசரியையும் உயர்த்தியுள்ளார்.

பள்ளியின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையில் 3 கணினிகள், 3 சிசிடிவி கேமராக்கள், போடியம் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் உள்ளிட்டவற்றையும் நன்கொடையாக பெற்றுத் தந்துள்ளார்.

தனது கல்விப் பணிகள், மாணவர் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக விழிப்புணர்வு பணிகளை அங்கீகரித்து நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு செய்த முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர்கள் உள்ளிட்ட கல்வித்துறை அதிகாரிகளுக்கும், விருது வழங்கிய தமிழக அரசுக்கும் தலைமை ஆசிரியை மணிமேகலை தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த விருதைப் பெற உறுதுணையாக இருந்த பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர், பள்ளி மேலாண்மைக் குழுவினர் மற்றும் தனது குடும்பத்தினருக்கும் அவர் நன்றியைத் தெரிவித்துள்ளார்.





# ஆட்டந்தாங்கல் கிராமம் ஸ்ரீ கண்ணன் ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி விழா

## தவெக நிர்வாகி எம்.கார்த்திக் ஏற்பாட்டில்

## பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கல்

மாதவரம், செப்.6–
திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் கிழக்கு ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் ஸ்ரீ கண்ணன் ஆலயத்தில் 29-ம் ஆண்டு கிருஷ்ண ஜெயந்தி விழாவை முன்னிட்டு திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற தவேக உறுப்பினருமான எம்.எல்.விஜய்பிரபு வழிகாட்டுதலின்படி தவெக நிர்வாகி எம். கார்த்திக் ஏற்பாட்டில் ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்கள் முன்னிலையில் சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் செய்து மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் சுற்றுவட்டார சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புடன் கூடிய அறுசுவை அன்னதானத்தை வழங்கினார். இதில் தவெக நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# கிருஷ்ணகிரியில் வீடு, வீடாக சென்று டெங்கு கொசு புழு ஒழிக்கும் பணி, விழிப்புணர்வு



கிருஷ்ணகிரி, செப்.07–
கிருஷ்ணகிரியில் மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் உத்தரை யின்படி வீடு, வீடாக சென்று நகராட்சி களப்பணியாளர்கள் டெங்கு கொசு புழு ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இது குறித்து நகராட்சி ஆணையர் சேகர் கூறுகையில், கிருஷ்ணகிரி நகராட்சியில் மொத்தம் 33 வார்டுகள் உள்ளன. தற்போது சாரல் மழை பெய்துள்ள நிலையில் வீடுகளை சுற்றி மழை நீர் தேங்கி டெங்கு கொசு புழுக்கள் உருவாகி டெங்கு பரவல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக டெங்கு கொசு புழு ஒழிப்பு பணி மற்றும் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திடம் வகையில், தலா 4 பேர் அடங்கிய 6 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவினர் நேற்று முன்தினம் நகராட்சிக்கு உட்பட்ட 14 மற்றும் 23 வது வார்டுகளில் உள்ள வீரப்ப நகர், பானாக்கார தெரு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் களப்பணி உதவியாளர் முருகன் மற்றும் நகராட்சி ஊழியர்கள் டெங்கு ஒழிப்பு பணிகளில் ஈடுபட்டனர்.

அப்போது, வீடுகளில் உள்ள தண்ணீர் தொட்டிகள், தண்ணீர் தேக்கி வைத்து ள்ள பேரல்கள் உள்ளிட்டவை ஆய்வு செய்து, அதற்கு மருந்து ஊற்றப்பட்டது. மேலும், வீடுகளை சுற்றி தேங்கி இருந்த தேங்காய் ஓடுகள், பழைய டயர்கள் உள்ளிட்ட பொருட்கள் அகற்றினர். பொதுமக்கள் தங்களுடைய வீடுகளில் உள்ள குடிநீர் தொட்டிகளில் புழுக்கள் உருவாகாத வகையில் மேல் மூடி அமைப்பதோடு, சுத்தம் செய்ய வேண்டும். காய்ச்சல் பாதிப்பு இருந்தால் உடனடியாக அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டும். பொதுமக்கள் தங்களது வீடுகளையும், சுற்று புறங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும், நீர் தேங்கும் இடங்களில் கொசு மருந்து தெளித்தல், கொசு ஒழிப்பு புகை தெளிப்பான் கொசு ஒழிப்பு பணிகள், கழிவு நீர் கால்வாய்கள் சுகாதரமாக பராமரிப்பது குறித்து அந்த பகுதி மக்களுக்கு விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு வருகிறது என்றார்.





■ நீலகிரி மாவட்டம் குன்னூர் தாலுகா வெலிங்டன் கண்டோன்மென்ட் பகுதிக்கு உட்பட்ட, ஜெயந்திநகர் கிராமத்தில் அமைந்துள்ள, ராதேகிருஷ்ணர் திருக்கோவிலில் கிருஷ்ணஜெயந்தி தினத்தினை முன்னிட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது.பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பின்பு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.





# ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி ஆலயத்தில் 68-ம் ஆண்டு ஆடிதிருவிழா

மாதவரம், செப்.6–
மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி திருவிக தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி ஆலயத்தில் 68-ம் ஆண்டு ஆடிதிருவிழா ஆலய பொறுப்பாளர்கள் பிரபாகரன், ராமன் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் காப்புகட்டுதல், பால்குடம் எடுத்தல், கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை மற்றும் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.

# தேசத்திற்கான சமரச தீர்வு 3.0 திட்டத்தினை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள அழைப்பு

கிருஷ்ணகிரி, செப்.06–
தேசத்திற்கான சமரச தீர்வு 3.0 திட்டத்தினை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து கிருஷ்ணகிரி மாவட் சமரச மைய ஒருங்கிணைப்பாளரும், சார்பு நீதிபதியுமான லதா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: உச்ச நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் வழிகாட்டுதலின் பேரில், தேசத்திற்கான சமரச தீர்வு 3.0 திட்டத்தின் படி, கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாவட்ட சமரச மையம், சார்பு மையங்களான ஓசூர், தேன்கனிக்கோட்டை, போச்சம்பள்ளி, ஊத்தங்கரை ஆகிய நீதிமன்றங்களில் வருகிற அக்டோபர் மாதம் 1ம் தேதி முதல் டிசம்பர் மாதம் 31ம் தேதி வரை இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில், நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் வழக்குகள், சமரசம் செய்யக்கூடிய குற்றவியல் வழக்குகள், சாசோலை தொடர்பான வழக்குகள், வங்கி கடன் தொடர்பான வழக்குகள், மோட்டார் வாகன விபத்து வழக்குகள், குடும்ப பிரச்சனைகள் தொடர்பான வழக்குகள், உரிமையியல் வழக்குகள், நிலம், சொத்து பாகப்பிரிவினை மற்றும் வாடகை கோருரிமை பிரச்சனைகள் போன்ற வழக்குகள் விசாரித்து சமரச தீர்வு காணப்படும். எனவே, வழக்கறிஞர்கள், வழக்காடிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது நிலுவையில் உள்ள வழக்குகளை, அவர்களது வழக்குகள் சார்ந்த நீதிமன்றங்களில் தங்கள் வழக்கறிஞர் மூலமாக குறிப்பாணை மூலம் தெரிவித்து, தேசத்திற்கான சமரச தீர்வு 3.0 திட்டத்தினை பயன்படுத்திக் கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், சமரச மையத்தில் முடித்துகொள்ளும் வழக்குகளுக்கு நீதிமன்ற கட்டணம் திரும்ப பெற்று கொள்ளலாம். மேல்முறையீடு கிடையாது. சட்டரீதியாக சமரச முறையி தீர்வு காணப்படும். மேலும் தகவலுக்கு 04343&225069 என்ற தொலைபேசி எண்ணில் தொர்பு கொள்ளலாம். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் மாவட்ட சமரச மைய ஒருங்கிணைப்பாளர் லதா தெரிவித்துள்ளார்.







■ திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கில், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில், மாவட்டத்தில் 18 வயதிற்குட்பட்ட இளம் வயது கர்ப்பம் (Teenage Pregnancy) தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஒருங்கிணைப்புக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., தலைமையில் அன்று (03.09.2026) நடைபெற்றது. உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள.தமிழரசி, மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் விஜயகுமாரி, வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார், வாணியம்பாடி துணைக்காவல் கண்காணிப்பாளர் மகாலட்சுமி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.நா.கலுசிவலிங்கம், மாவட்டக்கல்வி அலுவலர் தாம்சன் உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்.

# சென்னை மெட்ரோ ரயில்களில் பெண்களை இழிவுபடுத்தும் விளம்பரங்கள்

## சு.வெங்கடேசன் எம்.பி சாடல்

சென்னை,செப்.07–
சென்னை மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்களுக்கு உள்ளே வைக்கப்பட்டுள்ள சில விளம்பரங்கள் பெண்களை இழிவுபடுத்தும் வகையிலும் நாகரிக சமூகத்திற்கு எதிரானதாகவும் உள்ளன' என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்.பி சு.வெங்கடேசன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சிறப்பான பொதுப் போக்குவரத்து சேவைகளை வழங்கி வரும் அதேவேளையில், அதன் நிலையங்கள் மற்றும் ரயில்களுக்கு உள்ளே வைக்கப்பட்டுள்ள சில விளம்பரங்கள் பெண்களை இழிவுபடுத்தும் வகையிலும் நாகரிக சமூகத்துக்கு எதிரானதாகவும் உள்ளன.

குறிப்பாக, மெட்ரோ ரயிலுக்குள் வைக்கப்பட்டுள்ள ஒரு நிதி நிறுவனத்தின் விளம்பரத்தில், "பெண் நண்பர் (Girl-friend) 0% வட்டி தரலாம்..." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய விளம்பரம் பெண்களின் கண்ணியத்தையும் சுயமரியாதையையும் கேள்விக்குள்ளாக்குவதுடன், ஆழமான ஆணாதிக்க மனப்பான்மையையும் பிரதிபலிக்கிறது.

பெண்களைத் தரக்குறைவாக நடத்தும் மற்றும் அவர்களை வெறும் பொருளாகச் சித்தரிக்கும் இந்த விளம்பரம் கடும் கண்டனத்துக்குரியது.

மெட்ரோ ரயில் நிர்வாகம் இத்தகைய விளம்பரத்தை எப்படி அனுமதித்தது என்பது கேள்விக்குரியது. இந்த விளம்பரத்தை உடனடியாக அகற்றுமாறும், இதனை காட்சிப்படுத்த அனுமதிக்கப்பட்டதற்குப் பொறுப்பானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.' எனத் தெரிவித்துள்ளார்.

# மின்துறை அறிவிப்புகளை திரும்பப் பெற வேண்டும்

## மின்ஊழியர் மத்திய அமைப்பு வலியுறுத்தல்

சென்னை,செப்.07–
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச்செயலா ளர் ஜெயசங்கர் நேற்று வெளி யிட்டுள்ள அறிக்கை: சட் டப்பேரவையில் மானிய கோரிக்கையின் போது தூத்துக்குடியில் சூப்பர் கிரிட் தெர்மல் நிலையம் அரசு, தனியார் பங்களிப் புடன் தொடங்கப்படும் என முதல்வர் அறிவித்துள்ளார்.

அதேபோல், எண்ணூர் அனல் மின் நிலையமும் தனியார், அரசு பங்களிப்பு மூலம் தொடங்கப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கேரளா போல கேப்க்ஸ் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை செயல்படுத் தாமல், மின்விநியோக பணி களையும், மின் கணக்கீட்டு பணிகளையும் - தரவுகளை யும் தனியாரிடம் ஒப்படைக் கும் வகையில் டோடெக்ஸ் ஸ்மார்ட் மீட்டர் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மின்சார வாரி யத்தில் ஐந்தாண்டு ஒப் பந்த முறையில் 10 ஆயிரம் பேர் பணி அமர்த்தப்படுவர் என கூறப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புகள் மின்சார வாரி யம் தனியார் மையத்தை நோக்கி செல்வதை உணர்த் துகிறது.

இந்த அறிவிப்புகளை திரும்பப் பெற வேண்டும். மின் துறையை தனியார் பாதைக்கு கொண்டு செல் லும் முடிவு கண்டிக்கத்தக் கது. எனவே, அரசின் இந்த அறிவிப்புகளை உடனடி யாக திரும்பப் பெற வேண் டும் இல்லையெனில், மிகப் பெரிய அளவில் போராட் டத்தை நடத்துவோம். இவ் வாறு ஜெயசங்கர் கூறி யுள்ளார்.

# திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் முதுகு தண்டுவட மாற்றுத்திறனாளிகளின் அமைப்பு மற்றும் சொசைட்டி ஆப் சேலஞ்சர்ஸ் சோசியல் சாரிட்டபிள் டிரஸ்ட் விழிப்புணர்வு முகாம்



திருவள்ளூர், செப்.07-

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தண்டுவடம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பு திருவள்ளூர் மாவட்டம் மற்றும் சொசைட்டி ஆப் சேலஞ்சர்ஸ் சோசியல் சார்ட்டபிள் டிரஸ்ட் reg no 732/09 சார்பாக செப்டம்பர் 5 முதுகு தண்டுவட பாதிப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்டத்தின் ஆட்சித் தலைவர்,ச. கவிதா, தலைமையில் முதுகு தண்டுவட பாதித்தவர்களுக்கான விழிப்புணர்வு உறுதி மொழியினை அனைவரும் ஏற்று க்கொண்டனர் .உதவி ஆட்சியர் பயிற்சி செல்வி. பி.பவித்ரா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குமார் அவர்களும் மற்றும் துறை சார்ந்த அலுவலர் உடன் இருந்தனர். இந்நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் .ச.கவிதா,இ.ஆ.ப., கொடியசைத்து இந்நிகழ்ச்சியை துவங்கி வைத்து முதுகு தண்டுவட பாதித்த சுமார் 70-க்கும் மேற்பட்டோர் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு பேரணியில் கலந்துகொண்டு சாலையில் எந்த ஒரு இடையூறு இன்றி நேர்த்தியாக ஊர்வலம் சென்று விழிப்புணர்வை பொதுமக்கள் இடையே ஏற்படுத்தி னார்கள் இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைந்த மதன் குமார், மற்றும் குழுவினர்களுக்கும் சொசைட்டி ஆப் சேலஞ்சர்ஸ் சோசியல் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனத் தலைவர், டாக்டர்., சி. அருண் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்தனர்கள்.









# ஆசிரியர் தின விழா: மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளியில் கோலாகலம்

மானாமதுரை, செப்.07-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் உள்ள பாபா மெட்ரிக் பள்ளியில் நேற்று (05.09.2026) ஆசிரியர் தின விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவில் மாணவர்களைப் போலவே ஆசிரியர்களும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். ஆசிரியர்களின் நடனம், பேச்சு, கவிதை, பட்டிமன்றம் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகளுடன் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தாளாளர் R. கபிலன், பள்ளி நிர்வாகி R. மீனாட்சி, பள்ளி முதல்வர் M. சாரதா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

ஆசிரியர்களை சிறப்பிக்கும் வகையில் கேக் வெட்டப்பட்டு, அவர்களுக்கு சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டன. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உற்சாகமாக கலந்து கொண்டதால் ஆசிரியர் தின விழா சிறப்பாக அமைந்தது.

# சிவகங்கை மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் செப்.9 முதல் 25 வரை




சிவகங்கை, செப்.07-

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை2026 மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் சிவகங்கை மாவட்டத்தில் செப்டம்பர் 9 முதல் 25-ஆம் தேதி வரை நடைபெற உள்ளன.

பள்ளி மாணவ ர்களுக்கான தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, கபடி, கையுந்துபந்து, வளைகோல்பந்து, நீச்சல், செஸ், யோகாசனம், கேரம், கால்பந்து, கிரிக்கெட், டேபிள் டென்னிஸ் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன.

கல்லூரி மாணவ, மாணவிகளுக்கும் தடகளம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன. மேலும் பொதுப் பிரிவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் தனித்தனியாக போட்டிகள் நடைபெறுகின்றன.

மாற்றுத்தி றனாளிக ளுக்கான விளை யாட்டுப் போட்டிகள் செப்டம்பர் 25-ஆம் தேதி சிவகங்கை மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெறும்.

போட்டிகள் சிவகங்கை மாவட்ட விளையாட்டரங்கம், காரைக்குடி உள்ளிட்ட இடங்களில் அந்தந்த போட்டி களுக்கான அட்டவணை ப்படி நடைபெற உள்ளன.

ஆன்லைன் மூலம் பதிவு செய்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் தங்களுக்கான Bonafide Certificate அல்லது School/College ID Card, ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்கு புத்தக நகல் ஆகியவற்றை கொண்டு வர வேண்டும். அரசு ஊழியர்கள் தங்களது துறை அடையாள அட்டை, ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்கு புத்தக நகலை கொண்டு வர வேண்டும்.

போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர், வீராங்க னைகள் தங்களுக்குத் தேவையான விளை யாட்டு உபகரணங்களுடன், போட்டி நடைபெறும் நாளில் காலை 7 மணிக்கு தங்களுக்காக ஒதுக்கப்பட்ட விளையாட்டு மைதானத்திற்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் விவரங்களுக்கு சிவகங்கை மாவட்ட விளையாட்டு அலுவல கத்தை 04575-299293 என்ற தொலைபேசி எண்ணில் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் தெரிவித்துள்ளார்.



# குன்னூர் நகர காங்கிரஸ் கமிட்டி சார்பில் மறுசீரமைப்பு குறித்த ஆலோசனை கூட்டம்

குன்னூர், கூஷசுழ்.6-

குன்னூர் நகர காங்கிரஸ் சார்பில் இயக்க மறுசீரமைப்பு திட்டத்தின் காங்கிரஸ் கட்சி சிறப்பு ஆலோசனைக் கூட்டம் குன்றூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் நாகராஜ் முன்னிலை வகிக்க குன்னூர் நகரத் தலைவர் ஆனந்தகுமார் தலைமை தாங்கினார். இதில் கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் தலைவரும்,கட்சியின் பொறுப்பாளருமான அசோகன் சாலமன் சிறப்பு அழைப் பாளராக பங்கேற்றார். நிகழ்ச்சியில் நகர காங்கிரஸ் கட்சி சார்பில் நகர தலைவர் ஆனந்தகுமார் நகர நிர்வாகிகளின் முக்கிய பொறுப்புகள் குறித்த விண்ணப்பங்களை வழங்கினார். நிகழ்ச்சியில் கட்சியின் நிர்வாகிகள் பாலன், சுப்பிரமணி, பார்த்திபன், பார்வதி,மூத்த தலைவர் பார்வதி, மூர்த்தி, முருகேசன், மணி, மது,ராஜன், கிங்ஸ்டன், மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்



# மானாமதுரை வட்டார மாணவர்களுக்கு கலைத் திருவிழா போட்டிகள்

மானாமதுரை, செப்.07-

சிவகங்கை மாவட்டம் மானா மதுரை அருகே ராஜகம்பீரத்தில் உள்ள புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில், தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி பள்ளி மாணவர்களின் கலைத்திறனை வெளிப்ப டுத்தும் வகையில் கலைத் திருவிழா போட்டிகள் செப்டம்பர் 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் நடைபெற்றன.

மானாமதுரை வட்டாரத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் இதில் பங்கேற்றனர். 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பல்வேறு கலைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளை சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி உதவி திட்ட அலுவலர் அழகர்சாமி மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ ஆகியோர் பார்வையிட்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மானாமதுரை வட்டார கல்வி அலுவலர் சகாய செல்வன், அஸ்மிதா பானு, வளமைய மேற்பார்வையாளர் ராமையா, தலைமை ஆசிரியர் செல்வன், ஆசிரியர் பயிற்றுநர்கள், சிறப்பு ஆசிரியர்கள், தசைப் பயிற்சியாளர், வட்டார கணக்காளர்கள் மற்றும் கணினி விவரப் பதிவாளர் ஆகியோர் சிறப்பாக செய்து போட்டிகளை நடத்தி முடித்தனர்.

# மாநில யோகாசன சாம்பியன்ஷிப்: சிவகங்கை மாணவர்கள் சாதனை

காரைக்குடி, செப்.07-

தமிழ்நாடு யோகாசன பெடரேஷன் சார்பில் 9-வது தமிழ்நாடு யோகாசன ஸ்போர்ட்ஸ் சாம்பியன்ஷிப் ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரியில் நேற்று 05.09.2026 சிறப்பாக நடைபெற்றது.

இப்போட்டியில் தமிழகம் முழுவதிலும் இருந்து 1,000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் சிவகங்கை மாவட்டம் சார்பில் 80 மாணவர்கள் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

சிவகங்கை மாவட்ட அணியை தமிழ்நாடு யோகா பெடரேஷன் சிவகங்கை மாவட்ட செயலாளர் யோகா ஆச்சார்யா பூ. புவனேஷ், துணைச் செயலாளர் மற்றும் பயிற்சியாளர் மா. பாலமுருகன், பயிற்சியாளர் ம. சிந்தலை சூர்யா ஆகியோர் சிறப்பாகப் பயிற்றுவித்து வழிநடத்தினர்.

மாநில அளவிலான போட்டியில் சிறப்பாக செயல்பட்ட சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த 32 மாணவர்கள் தேசிய அளவிலான யோகா போட்டியில் பங்கேற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மாநில அளவிலான போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்று பரிசுகளை பெற்ற அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் சிவகங்கை மாவட்ட யோகா பெடரேஷன் சார்பில் வாழ்த்துகளும் பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டன.





# ஸ்ரீ சிவசக்தி செல்வ விநாயகர் ஆலயத்தில் மஹா கணபதி ஹோமம்- 108 சங்காபிஷேகம் விழா

மாதவரம், செப்.6-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி சேரன் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சிவசக்தி செல்வ விநாயகர் ஆலயத்தில் 32-ம் ஆண்டு சதுர்த்தி திருவிழாவை முன்னிட்டு மஹா கணபதி ஹோமம் மற்றும் 108 சங்காபிஷேகம் விழா ஆலய தர்மகர்த்தா ஆர்.சக்திமோகன் ஏற்பாட்டில் மற்றும் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் உலகமக்கள் நன்மைகள் வேண்டி குருக்களின் மூலமந்திரங்கள் முழங்க மஹா கணபதி ஹோமம் நடைபெற்றது. பின்னர் மேளதாளத்துடன் அருள்மிகு ஸ்ரீ சிவசக்தி செல்வ விநாயகருக்கு 108 சங்காபிஷேகம் மற்றும் புனிதகலசநீர் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது . இவ்விழாவிற்கு ஆலய நிர்வாகிகள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.



■ தேனி மேலப்பேட்டை இந்து நாடார் உறவின்முறை நாடார் சரஸ்வதி கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் தினம் மற்றும் கிருஷ்ண ஜெயந்தி விழா இணைந்து கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, மாணவர்களை திறமையானவர்களாக உருவாக்கும் பணியின் சிறப்பு குறித்து பேசப்பட்டது. கிருஷ்ணர், ராதை வேடமணிந்த மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. திருக்கல்யாண வைபவம்தி ருவாடானை அருகே புலியூர் கிராமத்தில் உள்ள ருக்மணி சமேத கிருஷ்ணர் கோயிலில் கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு ருக்மணிகிருஷ்ணர் திருக்கல்யாணம் சிறப்பாக நடைபெற்றது. வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட உற்சவ மூர்த்திகளுக்கு சிறப்பு பூஜை, தீபாராதனை நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். இறுதியில் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

# ஊர்க்காவலன் கொலை வழக்கு: 5 பேர் மீது குண்டர் சட்டம் பாய்ந்தது




மானாமதுரை, செப்.07-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை உட்கோட்டம் திருப்பாச்சேத்தி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மாத்தூர் கிராமத்தில் ஊர்க்காவலன் கொலை செய்யப்பட்ட வழக்கில் தொடர்புடைய 5 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

கடந்த ஜூலை 30-ஆம் தேதி ஊர்க்காவலன் வெட்டிக் கொலை செய்யப்பட்ட வழக்கில் 7 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில், பிரசாந்த் (31), வினோத் (24), வேலீஸ்வரன் (20), பிரபாகரன் (23), பரத் (19) ஆகிய 5 பேரை குண்டர் சட்டத்தில் தடுப்புக் காவலில் வைக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா பரிந்துரை செய்தார்.

இதையடுத்து மாவட்ட ஆட்சியர் உத்தரவின்பேரில் 5 பேரும் திருச்சி மத்திய சிறையில் அடை க்கப்பட்டனர். நடவடிக்கை மேற்கொண்ட திருப்பா ச்சேத்தி காவல் ஆய்வாளர் அருண் மற்றும் விசாரணைக் குழுவினரை எஸ்.பி. பாராட்டினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161